ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ அங்கண் ஞாலம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அங்கண் ஞாலம் ॥

## சிங்கவேள் குன்றம்

‡அங்கண் ஞாலம் அஞ்ச⋆ அங்கோர் ஆள் அரியாய்⋆ அவுணன்
பொங்க ஆகம் வள் உகிரால்⋆ போழ்ந்த புனிதன் இடம்⋆
பைங்கண் ஆனைக் கொம்பு கொண்டு⋆ பத்திமையால்⋆ அடிக்கீழ்ச்
செங்கண் ஆளி இட்டிறைஞ்சும்⋆ சிங்கவேள் குன்றமே (1)

அலைத்த பேழ்வாய்⋆ வாள் எயிற்றோர் கோளரியாய்⋆ அவுணன்
கொலைக் கையாளன் நெஞ்சிடந்த⋆ கூர் உகிராளன் இடம்⋆
மலைத்த செல் சாத்தெறிந்த பூசல்⋆ வன் துடிவாய் கடுப்ப⋆
சிலைக் கை வேடர் தெழிப்பறாத⋆ சிங்கவேள் குன்றமே (2)

ஏய்ந்த பேழ்வாய்⋆ வாள் எயிற்றோர் கோளரியாய்⋆ அவுணன்
வாய்ந்த ஆகம் வள் உகிரால்⋆ வகிர்ந்த அம்மானதிடம்⋆
ஓய்ந்த மாவும் உடைந்த குன்றும்⋆ அன்றியும் நின்றழலால்⋆
தேய்ந்த வேயும் அல்லதில்லாச்⋆ சிங்கவேள் குன்றமே (3)

எவ்வும் வெவ்வேல் பொன் பெயரோன்⋆ ஏதலன் இன் உயிரை
வவ்வி⋆ ஆகம் வள் உகிரால்⋆ வகிர்ந்த அம்மானதிடம்⋆
கவ்வு நாயும் கழுகும்⋆ உச்சிப்போதொடு கால் சுழன்று⋆
தெய்வம் அல்லால் செல்ல ஒண்ணாச்⋆ சிங்கவேள் குன்றமே (4)

மென்ற பேழ்வாய்⋆ வாள் எயிற்றோர் கோளரியாய்⋆ அவுணன்
பொன்ற ஆகம் வள் உகிரால்⋆ போழ்ந்த புனிதன் இடம்⋆
நின்ற செந்தீ மொண்டு சூறை⋆ நீள் விசும்பூடிரிய⋆
சென்று காண்டற்கரிய கோயில்⋆ சிங்கவேள் குன்றமே (5)

எரிந்த பைங்கண் இலங்கு பேழ்வாய்⋆ எயிற்றொடிதெவ்வுருவென்று⋆
இரிந்து வானோர் கலங்கி ஓட⋆ இருந்த அம்மானதிடம்⋆
நெரிந்த வேயின் முழையுள் நின்று⋆ நீள் நெறிவாய் உழுவை⋆
திரிந்த ஆனைச் சுவடு பார்க்கும்⋆ சிங்கவேள் குன்றமே (6)

www.prapatti.com

முனைத்த சீற்றம் விண் சுடப்போய்⋆ மூவுலகும் பிறவும்⋆
அனைத்தும் அஞ்ச ஆள் அரியாய்⋆ இருந்த அம்மானதிடம்⋆
கனைத்த தீயும் கல்லும் அல்லா⋆ வில்லுடை வேடருமாய்த்⋆
தினைத்தனையும் செல்ல ஒண்ணாச்⋆ சிங்கவேள் குன்றமே (7)

நாத்தழும்ப நான்முகனும்⋆ ஈசனுமாய் முறையால்
ஏத்த⋆ அங்கோர் ஆள் அரியாய்⋆ இருந்த அம்மானதிடம்⋆
காய்த்த வாகை நெற்றொலிப்பக்⋆ கல் அதர் வேய்ங்கழை போய்த்⋆
தேய்த்த தீயால் விண் சிவக்கும்⋆ சிங்கவேள் குன்றமே (8)

நல்லை நெஞ்சே! நாம் தொழுதும்⋆ நம்முடை நம் பெருமான்⋆
அல்லிமாதர் புல்க நின்ற⋆ ஆயிரந் தோளன் இடம்⋆
நெல்லி மல்கிக் கல் உடைப்பப்⋆ புல் இலை ஆர்த்து⋆ அதர்வாய்ச்
சில்லி சில் என்றொல்லறாத⋆ சிங்கவேள் குன்றமே (9)

‡செங்கண் ஆளி இட்டிறைஞ்சும்⋆ சிங்கவேள் குன்றுடைய⋆
எங்கள் ஈசன் எம்பிரானை⋆ இருந் தமிழ் நூற் புலவன்⋆
மங்கை யாளன் மன்னு தொல்சீர்⋆ வண்டறை தார்க் கலியன்⋆
செங்கையாளன் செஞ்சொல் மாலை⋆ வல்லவர் தீதிலரே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com